
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**936**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

**25**

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

பள்ளிகளில் மாணவர்கள் படிக்கும் கால அளவை நாளொன்றுக்கு மூன்று மணி நேரமாகக் குறைப்பது என்றும், அந்நேரத்தில் குழந்தைகளின் பெற்றோர் செய்யும் தொழில்களைக் கற்றுக்கொள்ள வசதி செய்து கொடுக்கவும் சர்க்கார் தீவிரமாக ஆலோசித்து வருகின்றது. பரம்பரைத் தொழில் செய்யாத குலத்தில் பிறந்த குழந்தைகள் வயல்களிலும், தொழிற்சாலைகளிலும் பிறர் செய்யும் தொழில்களைக் கவனிக்கச் செய்து கற்கச் செய்யவும் ஆலோசிக்கப்படுகிறது. விவசாயத் தொழில்கள், கொட்டகை போடுதல், செங்கல் அறுப்பு வேலைகள், கிணறு வெட்டுதல் போன்ற பல வேலைகளில் பள்ளிச் சிறுவர் சிறுமியரைப் பழக்கப்படுத்துவது என்பதும் யோசிக்கப்பட்டு வருகிறது” என்று ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி உரிமை மீது பாறாங்கல்லைத் தூக்கி வீசினார்.

திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் வெகுண்டு எழுந்தன. கிராமங்களில் பள்ளிகள் முன்பு மறியல் நடக்கும் என்று பிரகடனம் செய்தார் பெரியார். இந்தச் சூழலில், பேரறிஞர் அண்ணா தி.மு.க. தலைமை அலுவலகத்தில் வைத்து அண்ணா, ஈ.வெ.கி.சம்பத், நாவலர், என்.வி.நடராசன், கே.ஏ.மதியழகன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இதையடுத்து, அன்னை சத்தியவாணி முத்து தலைமையில், 40 பேர் அறப்போருக்குப் புறப்பட்டனர். அவர்களில் காசி முகமது தின்சா, ஜோசப் ஆகியோரும் முக்கியமானவர்கள். இரண்டாவது நாள் என்.எஸ்.இளங்கோ தலைமையில், புறப்பட்ட தி.மு.கழகப் படையில் எம்.கே.மீரான் கைது செய்யப்பட்டார். நான்காவது நாளில் எம்.எஸ்.இராமசாமி தலைமையில் புறப்பட்ட கழகப் படையில், ஸ்டான்லி, ஜே.எஸ்.ஆபிரகாம், ஆசிர்வாதம், முஸ்தபா, அப்துல் ரகுமான் ஆகியோர் மறியலில் பங்கேற்று கைதாகினர்.

ஐந்தாவது நாளில் சார்லஸ், ஏழாவது நாளில் ஃபிரான்சிஸ், எட்டாவது நாளில் அமுத் சரீஃப், கரீம், பத்தாவது நாளில் எஸ்.கே.கவுஸ், பதினைந்தாம் நாளில் ஜே.மோசஸ் என ராஜாஜி வீட்டின் முன்பு நடைபெற்ற தொடர் மறியலில் பங்கேற்று, காவல்துறையின் தடியடிக்கும் கொடுந்தாக்குதலுக்கும் ஆளான சிறுபான்மையினர் ஏராளம். போராட்டத்தின் ஒவ்வொரு நாளும், ‘ஆச்சாரியார் ஆட்சி ஒழிக’, ‘திராவிட நாடு திராவிடர்க்கே’ என்ற முழக்கம் ஓங்கி ஒலித்தது.

### கல்லக்குடி மறியல்

ராஜாஜி வீட்டின் முன்பு மறியல் தொடங்கிய நாளிலேயே, ரயில் மறியல் போராட்டமும் தொடங்கியது. குறிப்பாக, டால்மியாபுரம் பெயரை மாற்றக்கோரி, முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் பெரும்படை ரயில் நிலையம் நோக்கி புறப்பட்டது. கல்லக்குடி என்று அச்சிடப்பட்ட தாளை டால்மியாபுரம் பெயர்ப் பலகையின் மீது ஒட்டினார் கலைஞர். உடன்சென்ற முல்லைசத்தி, கஸ்தூரி, குழந்தைவேல், குமரவேல் உள்ளிட்டோருடன் தண்டவாளத்தில் தலைவைத்தார் கலைஞர். ரயில் என்ஜினை ஆன் செய்தும் அசையாமல் படுத்திருந்தார் கலைஞர்.




# மும்முனை யுத்தத்தில் சிறுபான்மையினர்!

“எல்லோரும் டாக்டர்தான் ஆக வேண்டுமா? மருத்துவப் படிப்பை விட்டால், வேறு படிப்பே இல்லையா?” என்கிற குரலை நீட் தேர்வு எதிர்ப்பின்போது சிலர் வெளிப்படுத்தினர். இந்தக் குரல் சாதாரணக் குரல் அல்ல, இந்து உயர்சாதி மனோபாவத்தின் ஆணவக் குரல் என்பதுதான் உண்மை.

மருத்துவப் படிப்பின் மீது ஆர்வங்கொண்ட மாணவர்கள் மட்டும்தான் விண்ணப்பிக்கிறார்களே ஒழிய, எல்லோரும் அல்ல. அப்படி மருத்துவம் படிக்க விரும்புவோரை, வெளியே தள்ள ஒன்றிய அரசு போட்டு வைத்திருக்கிற முட்டுக்கட்டையான நீட் தேர்வை எதிர்க்காமல், மருத்துவம் படிக்க விரும்பும் மாணவர்களிடம், ‘நீங்கள் மருத்துவம் மட்டும்தான் படிக்க வேண்டுமா? வேறு படிப்பே இல்லையா’ என்று உளவியல் ரீதியாகத் தாக்குவது புதிதல்ல. ஆச்சாரியாரின் காலத்தில் இருந்தே இத்தகைய மோசமான குரல்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன.

1952-ஆம் ஆண்டு ஜூன் 24-ஆம் தேதி சென்னையில் நடைபெற்ற சலவைத் தொழிலாளர்கள் மாநாட்டில் பங்கேற்ற அன்றைய முதல்வர் ராஜாஜி, “அவரவர் சாதித் தொழிலை, அவரவர் செய்ய வேண்டும். வண்ணார் வீட்டுப் பிள்ளைகள் படிக்க வேண்டியது இல்லை. குலத் தொழிலைச் செய்தால் போதும். எல்லோரும் படித்தால் எல்லோருக்கும் வேலை எங்கிருந்து கிடைக்கும்” என்று பேசினார். அந்தக் குரல்கள்தான் இப்போது எல்லோரும் டாக்டர் ஆக வேண்டுமா என்று மருவியிருக்கின்றன.

ராஜாஜி பேசியதுடன் மட்டுமல்ல, கல்வியில் இருந்து பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களை அகற்றும் விதமாக சிந்தித்து, ‘குலக்கல்வி திட்டம்’ ஒன்றையும் தூக்கி வந்தார். 20.03.1953 அன்று சட்டமன்றத்தில் பேசிய அப்போதைய கல்வி அமைச்சர் டாக்டர் எம்.வி.கிருஷ்ணாராவ், “தொடக்கப் சார்பில் மும்முனைப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தார்.

1959-ஆம் ஆண்டு ஜூலை 14-ஆம் தேதி குலக்கல்வியை எதிர்த்து, ராஜாஜி வீட்டின் முன்பு மறியல். ஜூலை 15-ஆம் தேதி தமிழர்களை ‘நான்சென்ஸ்’ என்று விமர்சனம் செய்த பிரதமர் நேருவைக் கண்டித்து ரயில் மறியல். அதே நாளில் திருச்சி மாவட்டத்தில் ‘டால்மியாபுரம்’ என்ற வடநாட்டு நிறுவனத்தின் பெயரால் ஊரை அழைப்பதை எதிர்த்து, ‘கல்லக்குடி’ என பெயர் மாற்றம் செய்யக் கோரி ரயில் மறியல். இந்த 3 முக்கியப் போராட்டங்களை அறிவித்து, தமிழ்நாட்டைப் பரபரப்பாக்கினார் அண்ணா. அந்த 3 போராட்டங்களிலும் சிறுபான்மைச் சமூகம் உடன்பிறப்புகளாக உடன்நின்றது.






### குலக்கல்வி எதிர்ப்பு!

ராஜாஜி வீட்டின் முன்பு மறியல் அறிவிக்கப்பட்ட நிலையில், சென்னையில் கழகத் காவல்துறை கைது செய்து அழைத்துச்சென்றது. அடுத்தடுத்து கழகத் தோழர்கள் அணி அணியாக தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்தனர். நண்பகலுக்கு மேல் பொறுமை இழந்த காவல்துறை கண்மூடித்தனமாக தாக்கத் தொடங்கியது. வானை நோக்கிப் பாய வேண்டிய துப்பாக்கிக் குண்டுகள், கழக உடன்பிறப்புகளின் முகத்தை, மார்பை, உடலைத் துளைத்தன.

> நண்பகலுக்கு மேல் பொறுமை இழந்த காவல்துறை கண் மூடித்தனமாக தாக்கத் தொடங்கியது.

அன்று ஒரே நாளில் தமிழ்நாடு முழுவதும் 11 உயிர்களைப் பலி கொடுத்தது கழகம். 70 பேருக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். 3,202 பேர் கைது செய்யப்பட்டனர். டால்மியாபுரத்தில் மட்டும் கலைஞர் உட்பட 34 பேர் கைது செய்யப்பட்டனர். அதில் எத்திராசு, ஹனீப் என சிறுபான்மைத் தோழர்கள் இருவரும் ஒரு மாதம் சிறைத் தண்டனை பெற்றனர். 35 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. கோவை, சென்னை எனப் பல பகுதிகளிலும் சிறுபான்மையினர் ரயில் மறியலில் ஈடுபட்டு கைதாகினர்.

அன்பில் தர்மலிங்கம், கண்ணதாசன் உள்ளிட்ட மேலும் 25 பேர் மீதும் வழக்கு பதியப்பட்டு, 6 மாதங்களுக்கு மேலாக விசாரணை நடத்தப்பட்டு வந்தது. அந்த வழக்கிலும் தஸ்தகீர், லிங்கர் ஜான், சூசை, ஐ.எம்.ஷெரீஃப், ஜோசப் ஆகியோருக்கு ஓராண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் தலைமைக் கழகத்தின் மேல்முறையீட்டால், அனைவரின் தண்டனைக் காலமும் குறைக்கப்பட்டது.

...நீளும்

## ‘பெரியார் : சாதி, தேசம் & சோசலிசம்’ நூல் அறிமுக விழா!




எஸ்.வி.ராஜதுரையின் Periyar : Caste, Nation & Socialism (பெரியார்: சாதி, தேசம் & சோசலிம்) என்ற புதிய நூலை ‘பீப்பிள்ஸ் லிட்டரேச்சர்’ பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

மனித உரிமை செயற்பாட்டாளரும், எழுத்தாளருமான வித்யா பூஷன் மற்றும் எழுத்தாளர் எஸ்.வி.ராஜதுரை ஆகியோருக்கு இடையிலான உரையாடலின் அடிப்படையில், இந்நூல் உருவாகியுள்ளது. வட இந்தியாவுக்குப் பெரியார் மேற்கொண்ட பயணங்கள், அதுசார்ந்த ஆவணங்கள் இந்த நூலில் திரட்டித் தரப்பட்டுள்ளன. அந்த வகையில், பெரியாரின் சாதி மற்றும் மதம் குறித்த தீவிர விமர்சனங்கள், பார்ப்பனிய எதிர்ப்பு, நாத்திகம், பகுத்தறிவு, சோசலிசம், கம்யூனிசம், நிலம், தொழிலாளர் அரசியல், தேசியவாதம் மற்றும் மொழிப் பிரச்சினை ஆகியவற்றில் அவர் கொண்டிருந்த நுணுக்கமான ஈடுபாடுகளை, தமிழ் வாசிப்பு வெளிக்கு அப்பால் கடத்துகிறது இந்நூல்.

இந்த நூலின் அறிமுக விழா, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், வருகிற 24.08.2025 அன்று, காலை 10 மணி முதல் மதியம் 2 மணிவரை அன்பகத்தில் நடைபெறுகிறது. நூலாசிரியர் எஸ்.வி.ராஜதுரை வரவேற்புரை ஆற்றுகிறார். சென்னை இதழியல் நிறுவனத்தின் தலைமை இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன், பெங்களூருவில் உள்ள இந்திய தேசியப் பல்கலைக்கழக சட்டப் பள்ளியின் துணைப் பேராசிரியர் கார்த்திக் ராம் மனோகரன், விசாகப்பட்டினத்தில் உள்ள பொருளாதார மற்றும் சமூக நீதிக்கான நிறுவனத்தின் இயக்குநர் கே.எஸ்.சலம் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர். பேராசிரியர் கனகவிநாயகம், வித்யா பூஷன் ராவத் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

பெரியாரின் சாதி ஒழிப்புச் சிந்தனைகள் இந்தியாவெங்கும் பரவட்டும்!

## ஃப்ளாஷ்பேக்



### ஊக்கம் தந்த தலைவரின் பேச்சு!



குமரகுருபரன்

1991-ஆம் ஆண்டு மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம், சன்னதி தெருவில், அப்போதைய நகரச் செயலாளர் ஜி.பெரியகருப்பன் அவர்கள் தலைமையில், தி.மு.க. இளைஞர் நற்பணி மன்றத்தை, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் - இன்றைய கழகத் தலைவர் அவர்கள் திறந்துவைத்தார். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. இயக்கத்தின் கொள்கைகளை மனதிலேந்தி, இளைஞர் அணியையும் கழகத்தையும் வளர்க்க பாடுபட வேண்டுமென்று, அப்போது தலைவர் அவர்கள் எங்களுக்கு வழங்கிய அறிவுரை, பசுமரத்தாணி போல என்றும் மறவாது நினைவில் இருந்து, எங்களை ஊக்கப்படுத்திக்கொண்டே இருக்கும்.

**- ‘அறிவாலயம்’ குமரகுருபரன், 98-வது வட்டப் பொறுப்பாளர், கழக விவசாய அணி, திருப்பரங்குன்றம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

**கருவூலம்**

### 5,000 பேர் கைது!

1962-ஆம் ஆண்டு ஜூலை விலைவாசி உயர்வை எதிர்த்து, ஒருநாள் அடையாள மறியல் போராட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடத்த வேண்டும் என தலைமைக் கழகம் ஆணையிட்டது. சென்னையில் 19.07.1962 அன்று காலை 10 மணிக்கு மறியல் தொடங்கி, மாலை 4 மணி வரை அணி அணியாகத் திரண்டு வந்து போராடிய சுமார் 5,000 பேர் கைது செய்யப்பட்டனர். பகல் 12 மணிக்கு மறியலைக் காணவந்த இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.இராசேந்திரனும் கைது செய்யப்பட்டார். ஏற்கெனவே, ஒரு அணிக்குத் தலைமையேற்று நடிகமணி டி.வி.நாராயணசாமியும் கைது செய்யப்பட்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131